பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22 , நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-

தரமான
✶ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு புரட்டாதி மீ 16 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 20 ( 02 10 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 198

ஒப்பந்தத்தில் ஒன்று; அரச அறிவித்தலில் வேறு

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு மட்டும் ஏன் இந்த நிலை?

## சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் கைதிகள் கேள்வி

யாழ்ப்பாணம். அக்டோபர் 2

**இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் அனைத்து அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படுவர் என்று கூறப்பட்டுள்ளது. ஆனல் அண்மையில் ஜனதிபதி செயலகம் விடுத்த அறிவித்தலில் தடுப்புக்காவல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

எம்மைப்போல் ஒப்பந்தத்தை ஆதரித்து சத்தியக் கடதாசியில் கையொப்பமிட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கைதிகள் பலரும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனல் எமக்குப் பாரபட்சம் காட்டப்படுகிறது எமக்கு மட்டும் ஏன் இந்த நிலை?

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை பூஸாவில் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக்கும் தண்டிக்கப்பட்ட கைதிகள், அதற்கு முன்னர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கேட்டிருக்கிறார்கள்

தென்னிலங்கைச் சிறைகளில் இன்னும் 209 அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் விடுதலை செய்யவேண்டும் எனக் கோரியே பூஸவில் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலுக்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு அறிவிக்கப்பட்ட கடைசித் தினமான பத்தாம் திகதிக்குள் 209 பேரும் விடுதலை செய்யப்படாவிட்டால் உண்ணாவிரதம் நீராகாரம் இன்றித் தொடரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது உண்ணாவிரதத்துக்கு ஆதரவு நல்கி விடுதலைக்கு உதவுமாறு அவர்கள் பொதுமக்கள், சமூக இயக்கங்கள், கட்சிகள் ஆகியவற்றுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாவிட்டால் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட மாட்டோமென பல இயக்கங்கள் சண்டிப் (8 ஆம் பக்கம் பார்க்க)

## 400 தாதிகள் பதவிக்கு 185 பேர் மட்டுமே விண்ணப்பம்!

யாழ்ப்பாணம், அக் 2

வடபகுதியில் தாதிகள் பதவிக்கு 400 வெற்றிடங்கள் உள்ளன. ஆனல் 185 பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர். இதிலும் பலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். இந்நிலையில் தாதிகள்பற்றுக் குறையைத் தீர்த்து வைப்பது எப்படி?

இவ்வாறு வட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர். எல். கனகசபை கேள்வி எழுப்பினர்.

அண்மையில் சுகாதாரத் திணைக்களத்தினல் ஆண், பெண் இருபாலாரிடம் இருந்தும் தாதிகள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. ஆனல்மொத்தம் 185 பேர்களே விண்ணப்பித்துள்ளனர்.

'இந்த 185 பேரில் எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்பட உள்ள பரீட்சையில் பலர் சித்தியடையாது போகலாம்.

"இந்நிலையில எமக்கு ஒதுக்கப்பட்ட 400 நியமனங்களில் எஞ்சியவை (8 ஆம் பக்கம் பார்க்க)

## ரஷ்யா வெற்றி

சோல், அக் 2

ஒலிம்பிக் உதைபந்தாட்டத்தில் ரஷ்யா பிரேஸிலை 2-1 கோல்களால் தோற்கடித்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டது. (ஒ-எ)

யாழ். பிரதம தபாற்கந்தோரில்

## தபாற் கட்டளை மோசடி; அதிகாரி தற்காலிக வேலை நீக்கம்

யாழ்ப்பாணம், அக். 2

யாழ்.பிரதமதபாற்கந்தோரில வெளிநாட்டுத் தபாற்கட்டளைகளை மோசடிசெய்ததாகக்குற்றஞ் சாட்டப்பட்டு அதிகாரி ஒருவர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழையில் உள்ள ஒருவருக்கு வெளிநாட்டில் இருந்து தபாற்கட்டளையாக ஏழ யிரம் ரூபா அனுப்பப்பட்டது. என்னும் தபாற்கந்தோரில கடமையாற்றிய ஒருவர் அதனை மாற்றி அப்பணத்தை மோசடி செய்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இது தொடர்பாக விசாரணை நடத்திய யாழ். தபாலக உயரதிகாரிகள் அவரை விசாரணை செய்ததன் பின்னர் தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளனர்.

யாழ். கோட்டையில் தபாலகம் இயங்கிக் கொண்டிருந்த பொழுது இநத மோசடி நடைபெற்றதாயினும் பல மாதங்களுக்குப பின்னர் தான் இது கண்டு பிடிக்கப்பட்டது

இதனிடையே கடந்த மாதங்களில் பிரிட்டனில் இருந்து வந்த காசுக் கட்டளை ஒன்று யாழ் தபாற்கந்தோரில் மோசடி செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. (ஒ-10)

கம்யூனிஸ்ட் கட்சியின்

## தலைவர், ஜனதிபதியாக கோர்ப்பச்சேவ் நியமனம்

மாஸ்கோ, அக் 2

ஜனதிபதியாகவும், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகவும் திரு. மிக்சேய்ல் கோர்ப்பச்சேவை சோவியத் சுப்ரீம் கவன்சிலின் விசேட கூட்டம் நேற்று நியமித்தது.

இப் பதவிகளை நேற்று முன்தினம் வரை திரு. அன்ட்றி குரொமிக்கோவே வகித்து வந்தார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுவின் அவசரக் கூட்டம் நேற்று முன்தினம் கூடியபோது, இந்த இரண்டு பதவிகளில் இருந்தும் திரு குரொமிக்கோவை அகற்றுவது என்று தீர்மானித்திருந்தது.

அதே தீர்மானத்தை நேற்று நடந்த சோவியத் சுப்ரீம் கவுன்ஸிலின் விசேட கூட்டம் அங்கீகரித்தது

திரு. அனரோலிலுக் ஜானே உப ஜனதிபதியாக நியமிக்கப்பட்டார். (ஒ-எ)

## ஒலிம்பிக இன்று முடிவு

சோல ஒலிம்பிக் போட்டி இன்று முடிவடைகிறது.

சென்றமாதம் 17 ஆம் திகதி போட்டிகள் ஆரம்பமாகின. (ஒ-எ)

வடக்கு. கிழக்கு மாகாணசபை:

## தேர்தலில் பங்குபற்ற 23கட்சிகளுக்கு அங்கீகாரம்

### புதியவை ஐந்தாகும்

கொழும்பு, அக் 2

வடக்கு. கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்ற 23 அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது

இவற்றில் பத்து, தமிழ் பேசும் மக்கள் பெரும்பாலும் அங்கம் கிசகும் கட்சிகளாகும்.

அந்தப் பத்துக் கட்சிகளில் புதிதாக அங்கீகரிக்கப்பட்ட ஐந்து கட்சிகளும் அவற்றின் செயலாளர்களின் பெயர் விவரங்களும் வருமாறு;-

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி — செயலாளர்; திரு. கே. பத்மநாபா, ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி — செயலாளர்; திரு ஜி ஞானசேகரன்.

தமிழ ஈழ விடுதலை இயக்கம் — செயலாளர்: திரு. ஏ அடைக்கலநாதன் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி செயலாளர்: திரு எஸ். தர்மரத்தினம், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி—செயலாளர்; ஜனப் எம். ஐ. எம். மொஹிதீன். (ஆ-க)



ஒலிம்பிக்கிலே ரஷ்யா கொடி கட்டிப் பறக்குது; ரஷ்யாவிலே கோர்ப்பச்சேவ் கொடி கட்டிப் பறக்கிறார்!

முச்சந்தி முரளி

குடாநாட்டில்

## கால்நடைகளுக்கு "கால்வாய் நோய்" பரவுகிறது

### இது கோமாரியிலும் மோசமானதாம்

யாழ்ப்பாணம், அக் 2

குடாநாட்டிலுள்ள கால்நடைகளுக்கு 'கால்வாய் நோய்' பரவ ஆரம்பித்துள்ளது. குறிப்பாக மாடுகளுக்கே இவ்விதமான கால்வாய் நோய் மிக வேகமாகப் பரவி வருகின்றது.

அளவெட்டிப் பகுதியில் மிக வேகமாகப் பரவும் இந்நோய் ஏனைய இடங்களுக்கும் பரவாது தடுப்பதற்காக தெல்லிப்பழை மிருக வைத்திய அதிகாரி தீவிர நடவடிக்கை எடுத்துள்ளார்

கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள இந்த 'கால்வாய் நோய்' கோமாரியிலும் விடப் பயங்கரமானது என மிருக வைத்தியவட்டாரங்கள் வர்ணித்தன (ஓ-119)

## 2 ஜவான்கள் மரணம்

கொழும்பு அக் 2

மட்டக்களப்பில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் இந்திய அமைதிப் படை ஜவான்கள் இருவர் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்படுகிறது. (ஓ-க)

## பூஸா கைதிகளைப் பார்க்க ஏற்பாடு

யாழ்ப்பாணம் அக். 2

பூஸா முகாமிலுள்ள கைதிகளைப் பார்வையிட அவர்களது உறவினர்களை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 4 ஆம்திகதி செவ்வாய்க்கிழமைஇவர்கள் இங்கிருந்து அழைத்துச்செல்லப்படுவார்கள்.

பூஸா செல்லப் பதிவு செய்தவர்கள் 4 ஆம்திகதி காலை 7மணிக்கு முன்னதாக யாழ் பஸ்நிலையத்துக்குச் சமீபமாக உள்ள வைரவர் கோவிலடியில் கூடுமாறு கேட்கப்படுகிறார்கள்.

பயணத்திற்கான ஏற்பாடுகளைத் தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டோர் மறுவாழ்வுக் கமிட்டி (யாழ் மாவட்டம்) செய்துள்ளது.

இங்கிருந்து செல்பவர்களுக்கான சகல செலவுகளையும் றெட்பானா ஸ்தாபனம்பெறுப்பேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது (ஓ)

12 போராளிகளின நினைவாக

## வல்வையில் 5ஆம் திகதி தூபி, பூங்கா திறப்புவிழா

யாழ்ப்பாணம், அக் 2

சடந்த வருடம் அக்டோபர் மாதம் 5ஆம் திகதி பலாலி இராணுவ முகாமில் சயனைட் உட்கொண்டு மரணமடைந்த லெப்டினன்ட் சேணல் குமரப்பா, லெப்டினன்ட் கேணல் புலேந்திரன் உட்பட விடுதலைப் புலிகளின இயக்கப் போராளிகள் 12 பேரின் நினைவுதினம் வல்வெட்டித்துறையில் எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை மிகப் பிரமாண்டமான அளவில் கொண்டாடப்பட இருக்கிறது.

வடமராட்சிமாணவர் ஒருங்கிணைப்புக் குழுவும். தமிழ் ஈழம் மக்கள் மன்றமும் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

தமிழீழ மக்கள் சார்பில், வடமராட்சி மக்களால் வல்வெட்டித்துறை திருவில் மைதானத்தில் — மரணித்த போராளிகளைத் தகனம் செய்த இடத்தில் — பல லட்சம்ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவும், நினைவுத்தூபியும் 5ஆம் திகதி புதன்கிழமை போராளிகளின் குடும்ப உறுப்பினர்களால் காலை 11 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளன.

யாழ் மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலிருந் (8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐம்பதினாயிரமே

யாழ்ப்பாணம், அக் 2

யாழ்ப்பாணம் காணிப் பதிவு அலுவலகத்தில் இருந்த காணி உறுதிகளின் ஐம்பதினாயிரம் மூலப்பிரதிகள் காணமற் பாயின.

கடந்த வருட இராணுவ நடவடிக்கையின் போது மொத்தம் 250 தொகுதிகள் காணமற் போய்விட்டன. அவற்றில் கட்டப்பட்டிருந்த மூலப்பிரதிகளின் எண்ணிக்கை ஐம்பதினாயிரமே.

நேற்றைய சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது போல் ஐந்து லட்சம் அல்ல என்பதை வாசகர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம். கணக்கில் ஏற்பட்ட தவறுக்கு வாசகர்கள் மன்னிப்பார்களாக. (அ,

ஆசிரிய கலாசாலை:

## கற்பித்தல் பயிற்சி நீடிப்பு

யாழ்ப்பாணம், அக் 2

பலாலி ஆசிரியர் கலாசாலை 2 ஆம் வருட ஆசிரிய மாணவர்களின் கற்பித்தல் பயிற்சி 4 ஆம் திகதி வரைநீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அந்நாட்களில் அவர்கள் கற்பித்தல் பயிற்சிக்குச் செல்லும் பாடசாலைகளுக்குச் செல்லுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

வடகக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல்

## ஒரே வேட்பாளர் பட்டியலை சமர்ப்பிக்க முயற்சி நடக்கிறது

கொழும்பு அக் 2

உத்தேச வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஈ பி ஆர். எல். எவ் டெலோ, ஈ என் டி எல் எவ் ஆகிய குழுக்கள் இணைந்து போட்டியிடுவதற்கான முயற்சிகள்நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

இந்தத் தமிழ் குழுக்களின் சார்பில ஒரே வேட்பாளர் பட்டியலை சமர்ப்பிப்பது பற்றியும் ஆராயப்பட்டு வருகிறதாம்

மேற்படி மூன்று இயக்கங்களின் முக்கியஸ்தர்கள் இது குறித்து தீவிரமாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது

இந்த மூன்று குழுக்களுடன் ஐக்கிய சோஷலிச முன்னணியும் இணையும் சாத்தியம் இருப்பதாகவும் கூறப்படுகிறது. (ஆ-க)

விடுதலைப் புலிகளின்

## தலைமைப் பீடத்துடன் பேச சிறப்புப் பிரதிநிதிகளை அனுப்புக

### ராஜீவுக்கு வீரமணி தந்தி

விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் நேரடிப்பேச்சு நடத்த உங்களது சிறப்புப் பிரதிநிதிகளை அனுப்புங்கள்

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி, பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பியுள்ள தந்தி ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இத் தந்தி கடந்த 19 ... கப்பட்டது.

பிரஸ்தாப தந்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

இலங்கையில் நல்ல சூழ்நிலை உருவாக போர் நிறுத்தத்தை நீடியுங்கள்.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறை வைத்துள்ள திரு கிட்டுவையும் ஏனைய 200 தமிழ் இளைஞர்களையும் உடனே ...

## சொந்த ஏற்பாட்டில் தாயகம் திரும்பியோருக்கும் உதவி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், அக் 2

1983 ஜூலை 24இல் அல்லது அதற்குப் பின் அகதியாக இந்தியா சென்று 1987 ஜூலை28க்குப் பின தமது சொந்த ஏற்பாட்டின்பேரில் தாயகம் திரும்பியவர்களுக்கும் உதவி வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்படியும். அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தமதுசொந்தஏற்பாட்டில் நாடு திரும்பியவர்கள், தங்கள்விவரங்களை யாழ் அரச அதிபரிடம் பதிவு செய்துகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

28-7-87க்குப் பின் (8 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

02. 10. 1988
புரட்டாதி - 16
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9.02முதல் 10 32வரை
ராகுகாலம்:
04 32முதல் 06.02வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பகல் 3 29 இன் மேல் அட்டமி

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம்சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6881)

### இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், குப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு Nallur Farm Centre, C/o Nallur வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6882)

Broiler இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு: No. 47, Vidanee Lane, Chundukkuli. (7055)

### விற்பனைக்கு

நல்ல இன வளர்ப்பு மீன்கள் (Gold fish (big), Angel, Guramiss, Silver Shark,) ஆகியனவும் இறைச்சிக் கோழிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ரட்ணவாசா, கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு. (பழைய புகையிரத வீதி) (6887)

திறி ஏக்கர் பாம் ஒரு நாள் Hyine வெள்ளை நிறக் பேட்டுக் கோழிக் குஞ்சுகள் இம் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. பதிவு செய்தவர்களும், செய்யாதவர்களும் காலை 9 மணியிலிருந்து 4-30 மணிவரையும். சுஜேராஸ் ஸ்தாபனம், இல. 21, வேம்படி ரோட், யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். (C 340)

கைலாச பிள்ளையார் கோவிலடிக்கு கிட்ட உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். இல. 7, நிக்கலஸ் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குழி. (6837)

புகையிலை, கருவாடு சிப்பம் கட்டுவதற்கு ஏற்ற கயிறு மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. சித்தி விநாயகர் ஸ்ரோர்ஸ், 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (7062)

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட C-50 Honda Chaly இரும்பு பிளாஸ்ரிக் Model சைக்கிள்கள் கொழும்பு விலைக்கும் C-70 Brand New பாவித்த சையிக்கிலும் விற்பனைக்குண்டு 166 கோயில் வீதி, (நல்லூர் கந்தன் கருணைக்கு அருகில்.) (6893)

### விற்பனையாகின்றது

6 ஆம் ஆண்டுக்கான அனுமதிப் பரீட்சைக்கானதும் தேர்வுப் பரீட்சைகானதுமான புதிய தமிழ் மொழிப் பயிற்சி [விளக்கங்களுடன்] விலை ரூபா 20.00 கிடைக்குமிடம்: ஞானசுரபி புத்தகக் கம்பனி (7074)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

87 Sri 6000தொடர் இலக்கமுடைய C70 (Econo-Power) சிவப்பு நிறமோட்டார்சைக்கிள் விற்பனைக்குண்டு. S. நவரட்ணம் 84/1 கொழும்புத்துறை மேற்கு, கொழும்புத்துறை (6897)

### காணி விற்பனை

நீர்வேலி வில்லுமத வடி பருத்தித்துறை வீதி அருகாமையில் ஏழு பரப்புக் காணி கிணறு மின் இணைப்புடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி. க. ச. குமாரசாமி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு. (6873)

சங்கானை முருகமூர்த்தி ஒழுங்கையை முகப்பாகக் கொண்ட 9பரப்புப்பனங்காணியும் அத்துடன் சேர்ந்ததென்னம்பிள்ளைக் காணியும் (கிணற்றுடன்) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் மு. தனபாலசிங்கம், 74, கண்டிவீதி, (150 புதிய இலக்கம்) யாழ்ப்பாணம். (7053)

### இறைச்சிக் கோழி

புரொயிலர் இறைச்சிக் கோழி, விருத்து, சேவல் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. மொத்தமாக எடுப்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு. சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (6786)

### கோழிக்குஞ்சு

### விநியோகம்

அதி சலுகை விலையில் ஒரு நாள் கோழிக்குஞ்சான லோமன், கைலைன், கோல்டன், கொமற் சிவப்பு மற்றும்பல இன பேடு, சேவல் புறயிலர்கள் அனைத்தும் 1. கலேசா மாஸ் கடை ஆனைக்குட்டி மதவடி, தெல்லிப்பழை, 2. செல்வ சண்முகா மாஸ் கடை சுன்னாகம். 3. மணிரூச் கூல் பார், துரை வீதி சந்தி, இணுவில். 4. லக்சுமி ஸ்ரோர்ஸ் கொக்குவில் சந்தி பெற்றுக் கொள்ளலாம். 100 க்கு மேலும் ஓடர் செய்து பெறுபவர்களுக்கு விஷேட சலுகை. (7063)

### தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் இரண்டு படுக்கை அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு தேவை. விபரங்களுக்கு: J. P. T. Ltd. 3. நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம். (7052)

### மணமகள் தேவை

இந்து வேளாள 23 வயது கிளிநொச்சியில் சுய தொழில் புரியும் மாதாந்த வருமானம் 3000/-) மணமகனுக்கு 20வயதுக்குட்பட்ட மணமகள்தேவை. மணமகள் கிளிநொச்சியில் வசிக்கக் கூடியவராக இருக்க வேண்டும். சீதனம், படம், சாதகக்குறிப்பு ஆகிய முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 199, C/o உதயன். [6879]

### மணமக்கள் தேவையா

எம்மிடம் எல்லாச் சாதி, சமயத்திலும் உத்தியோக முறைகளிலும் ஆண், பெண் யாவரும் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் நேரே வரலாம். தொடர்பு-மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (6654)

### மணமகள் தேவை

இந்து வேளாள இனத்தைச் சேர்ந்த சுவிற்சலாந்தில்வேலை செய்யும் 27 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். மணமகள் சுவிற்சலாந்து, ஜெர்மனியில் இருப்பது விரும்பத்தக்கது தொடர்பு: M. S. ராஜா234, (76) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (7061)

இந்து வேளாள 50 வயது பிரம்மச்சாரி தொழில் சார்ந்த தராதரம் பெற்ற (Professionally Qualified Accountant) கணக்காளருக்கு உறவினர் வாழ்க்கைத் துணையைத் தேடுகின்றனர். அவருடைய தகைமைகள் அனுபவங்களுக்கமைய கனடா, அல்லது அவுஸ்ரேலியா செல்ல உதவி செய்யக்கூடியவர்கள் சாதகக் குறிப்பு மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்க. இல. 381, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (7058)

### வாடகைக்கு

### விடப்படும்

சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ''பாக்கிய அசம்'' 3ஆம் கட்டை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (7057)

### வகுப்புகள்

### WIN INN LADIES ACADEMY

மங்கையர்க்கு ஓர் வரப்பிரசாதம் விஞ்ஞான ரீதியிலான மனையியல் வகுப்புகளும், கீழைத்தேய, மேலைத்தேய இசைவகுப்புகளாகிய வயலின் வீணை கிற்றார், ஓகன், வாய்ப்பாட்டு, பரதநாட்டியம் முதலியனவும் சிறப்பாக கற்பிக்கப்படுகின்றன. Shorthand Typing வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் காலை 9-12மணி வரை. 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி (6851)

### Spoken English

புதியபிரிவு தூர இடங்களிலிருந்து வருபவர் வசதியை முன்னிட்டு நேரம் பகல் 2மணி-4மணி; நாட்கள் திங்கள், புதன் ஆரம்பம்: 3-10-88. S. B. Iyar வைமன் வீதி, நல்லூர். (6864)

### Advanced English

புதியபிரிவு ஆரம்பம் 8-10-88 சனி, ஞாயிறு நாட்களில் காலை 8.30 மணி - 10.30மணி S.B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (6863)

### தொழில் கல்வி

வெளிநாடுகளில் பிரபல்யமான தொழில் கல்வி ஆரம்பம் 20-10-88 "Radio Amatures" (Morce Operators) (Ship) (P. M. G) ★ Telex & I. D. D Operators (Interntaional இருபாலரும் குறிப்பிட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர். அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும் Electronics Engineer Keen Centre, Thirunelvely. (6890)

### தவறி விட்டது

அருமைத்துரை பரமுருகானந்தன் ஆகிய எனது அடையாள அட்டை நல்லூர் திருவிழாவில் தவறி விட்டது. கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6891)

### மண்டலாபிஷேகம்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய நவக்கிரக மண்டலாபிஷேக பூர்த்திவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறுகின்றது.

காலை 8 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி விக்னேஸ்வர பூஜைமுதலியன நடைபெற்று கும்பம் வீதியுலா வந்து சங்காபிஷேகம் நிகழும்.

### தேவை

எலக்றிக்கல் றீவைண்டிங், வயறிங் வேலைகள், எயர் கொண்டிசன் வேலைகள் பழக ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும். Omega, Manipay Road, Jaffna. (7064)

### புரொயிலர் குஞ்சு

புரொயிலர் குஞ்சுகள் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேவையான அளவு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். (7066)

### GERMAN LANGUAGE

வெளி நாட்டில் உயர் கல்விப் படிப்பை தொடருபவர்களுக்காக முன் கூட்டியே வகுப்புகள் 3-10-1988 இல் அரம்பமாகிறது. பாஷையுடன் சம்பந்தப்பட்ட மொழி பெயர்ப்புக்களும் மேற்கொள்ளப்படும் தொடர்பு: Mr- Sabanayagam, German, Language Teacher 'Rudi Cot' 33, Kandy Road, Jaffna. (C 349)

### தவறிவிட்டது

வேஜினியா செறின் செல்வநாயகம் ஆகிய எனது அடையாள அட்டை 28-9-88 அன்று மட்டக்களப்பு பஸ் ஸிலோ அல்லது யாழ் பஸ் நிலையத்திலோ தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது 28, 3ம் குறுக்குத்தெரு என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (6894)

ஆனந்தராஜா ஸ்ரீகரன், 1ம் கட்டை காரைநகர் என்னும் பெயர், விலாசத்தையுடைய எனது அடையாள அட்டை சிறிய பிறவுண் கலர் பேஸ்சுடன் காரைநகர்-யாழ் மினி பஸ்ஸில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். (7060)

அம்மன் கோயிலடி அல்வாய் வடக்கு வல்லிபுரம் - ஜெகதீஸ்வரி மாணவியாகிய எனது இல: 716121194V அடையாள அட்டை இருபாலைச் சந்தியில் 27-9-88ல் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6899)

### மலிவு விற்பனை

மிகவும் நல்ல நிலையிலுள்ள ஜெனரேற்றர் 3 K. W [150 ரியூப்லைற் 2' ஒரே நேரத்தில் எரியக்கூடியது] கடைத் தேவைக்குரிய இரண்டு சேர்க்கேஸ் 4 X 2½ X 3 [முதிரை] வசந்தி எலக்ரிக்கல்ஸ், 110, கே. கே. எஸ். ரோட் சுன்னாகம், (பழைய பொலிஸ் நிலையம் முன்பாக) (7068)

### அரைச்சலார்

31-10-88 வரை விசேட சலுகை. உங்கள் குளிர்சாதனப் பெட்டிகளை ரூபா 600/- மாத்திரம் செலுத்தி ஒரு வருட உத்தரவாதத்துடன் ... கொள்ளுங்கள். OMEGA MANIPAY ROAD, JAFFNA (7065)


பத்தாம் ஆண்டுக்குரிய

# இலவச பாடநூல் விஞ்ஞானம் - 2

# இன்னும் பூரணமாக வழங்கப்படவில்லை

## ஆசிரியர் - மாணவர் பாதிப்பு

யாழ்ப்பாணம், அக். 2

கடந்தவருடம் பத்தாம் ஆண்டுக்கு வழங்கப்பட வேண்டிய அரசாங்கத்தின் இலவச பாடப் புத்தகமான 'விஞ்ஞானம் - 2' என்னும் தமிழ்மொழி மூலமான புத்தகம் இவ்வாண்டிலும் பூரணமாக இன்னும் வழங்கப்படாத நிலையினால் யாழ். மாவட்ட ஆசிரியர்களும் மாணவர்களும் மிகவும் கஷ்டமுறுகின்றனர்.

இவ்வருடம் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய க. பொ. த. சாதாரண தர வகுப்புக்களுக்குக் கூட கடந்தவருடம், கைநூல்களின் உதவியினை மட்டும் வைத்துக் கொண்டு ஆசிரியர்கள் கற்பித்து வந்தனர்.

இவ்வருடம் ''விஞ்ஞானம் - 2'' நூல் மிகக் குறைவாக யாழ்- மாவட்டத்திற்குக் கிடைத்ததினால் கல்விவட்டார அல்லது கொத்தணிரீதியாக நூறுக்கும் குறைந்த அளவே வழங்கப்பட்டுள்ளன. இந்நூல்களைச் சில பெரிய பாடசாலைகளுக்கு தலா நான்கு ஐந்தாக வழங்கிய பொழுதிலும் இன்னும் சில சிறிய பாடசாலைகள் ஒன்று கூடப் பெருத நிலையிலும்- பெறமுடியாத நிலையிலும்- கற்பிக்க முடியாத நிலையினை அடைந்துள்ளன.

இந்நூலினைச் சில காலத்துக்கு இரவலாக வேனும் பெரிய பாடசாலைகளிலிருந்து பெற முயன்ற பல சிறிய பாடசாலைகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இது சம்பந்தமாக கல்வி அதிகாரிகளூடாகவும், கொத்தணி அதிபர்களூடாகவும் கல்விப் பணிப்பாளர் திரு: வெற்றிவேலு சபாநாயகத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட தாகவும்—

கல்விப் பணிப்பாளர் மேற்படி நூல்களைப் பெற்று சகல மாணவர்களுக்கும் வழங்க துரித நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் 'உதயனுக்கு'த் தெரிய வந்துள்ளது.

(ஒ- 119)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## கணபதிப்பிள்ளை குமாரசாமி

ஆண்டவன் படைப்பு: 19 - 03 - 1941

அநியாய அழிப்பு: 14 - 10 - 1987

திதி: 02 - 10 - 1988

எமது அன்புத் தெய்வமே!

உங்களை எங்கள் கண் முன்னாலேயே காலன் பறித்தானே என்னையும் பிள்ளையையும் தவிக்க விட்டு எங்கு தான் சென்றீரோ, நீங்கள் எம்முடன் இல்லாத வாழ்வை எங்களால் என்றுமே தாங்கமுடியாமல் இருக்கிறது அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

உங்கள் அன்பு மனைவி
பரமேஸ்வரி
அன்பு மகன்
சஜீவ் நிரோஷன்

இன்று ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் ஆத்மா சாந்திக்காக தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தில் மகேஸ்வர பூசை நடைபெறும்.

(6901)

# இறையருளப்பருக்கு கூறும் நன்றிச் செபம்

புனித இறையருளப்பரின் வேண்டுதலினால் நான் கேட்ட காரியம் பூர்த்தியாகி விட்டது. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கின்றேன். அவர் வழியாக இவ் வரத்தை எமக்கு அளித்த இறை பிதாவைப் புகழ்ந்து பாடுகின்றேன். இன்றும், என்றும் அவர்க்கு நன்றியாக இருப்பேன். இதை வாசிக்கும் சகோதரர்களே உங்கள் வாழ்க்கையில் நீங்கள் விரும்புவது, நம்பி இருப்பது வேறு எந்த காரியத்தையாவது புனித இறை அருளப்பர் ஊடாக பெற்றுக்கொள்ளலாம். கேளுங்கள் தரப்படும் என்று யேசு கூறியுள்ளார். நீங்களும் உண்மை விசுவாசத்துடன் மன்றுடிப்பெற்றுக்கொள்ளுங்கள்.

நன்றி.

( 6900 )

எமது நேற்றைய புதிய வெளியீடு

உஷா சினிமா

✶ அர்ஜுன் ✶ பவ்யா

நடித்த

# என் உயிர் நீ தானே

(Pyramid ஒறிஜினல்)

(6909)

# காணவில்லை

எனது கடவுச்சீட்டு சாரதி அனுமதிப் பத்திரம் பிரயாணப் பைக்குள் (Travelling Bag) வைத்தபடி கொழும்பிலிருந்து மினி பஸ் வண்டியில் யாழ்ப்பாணம் வந்த சமயம் காணமற் போய்விட்டது. கண்டெடுப்பவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைப்பின் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

இப்படிக்கு
பரமேஸ்வரன் சிங்கராசா
வவுணத்தமிசை வீதி,
குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.

(6635)

# இலங்கை - இந்திய ஒப்பந்தமும் காணிக் குடியேற்றக் கோள்கையும்

பங்களூர் பேச்சுக்களின் போது இலங்கைத் தரப்பை இந்தியத்தரப்பு கேட்டுக் கொண்டது. மாகாணத்தில்உள்ள அரசகாணிகளை அந்தந்த மாகாணங்கட்கு 99 வருட குத்தகைக்கு விடமுடியுமோ என்பதை பரிசிலனை செய்யும்படி. ஆனல் இதை இலங்கை அரசாங்கம் உதாசினம் செய்து 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் அப்பென்டிக்ஸ். 11 ல்

1. அரச காணிகள் தொடர்ந்தும் குடியரசுக்குச் சொந்தம்.

2. குடியேற்றம் தேசிய இன விகிதாசாரப்படி இடம்பெறும் என்று கொண்டு வந்துள்ளது. இதன் பிரகாரம் வட, கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் 74½ தமிழர் 12½ இஸ்லாமியர் 8 விகிதம் குடியமர்த்தப்படுவர், முடிவு கிட்டத்தட்ட அடுத்த 25 வருடங்களில் யாழ் குடாநாடு தவிர்ந்த முழு வட, கிழக்கு மாகாணமும் சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசமாக மாறும்.

உரும்பராய் மக்கள் மன்றம்

(6884)

# VACANCIES IN SAUDI ARABIA

1. Work Schedullar
2. Have Split Units / Central A/C - Technicians 800 — 1000 & 100
3. Air Condition Technicians 700 — 800 & 100
4. Boiler Technicians 800 — 1000 & 100
5. Home Appliances (Electrical Equipment) Technicians 700 — 800 & 100
6. Electonic Technicians 750 — 900
7. Cleaning Equipment Mechanics 700 — 800 & 100
8. Heavy Equipment Mechanics 900 & 200 (Buldozor, Exauator Crane Etc)
9. Secretary / Typist 700 & 100
10. Air Comperesror Mechanic 800 & 900 & 100
11. Plumbers 600 & 150
12. Painter 500 & 150
13. Generator Electricians 600 & 150
14. Site Supervisors 600 & 150
15. Building Electricions 600 & 150
16. Swimming Pool Attendent 700 & 150
17. A/C Technicians 750 & 150
18. Civil Supervisor 600 & 100

தொடர்பு:-

## கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

குப்பிளான்.      வல்வெட்டி.

(C/350)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உறுதியான அடித்தளத்தில் உன்னதமான வளர்ச்சி

### முதலீட்டுப் பாதுகாப்பு

ஷப்ருவின் உறுதியும், அபரிமிதமான வளர்ச்சியும் உங்கள் முதலீட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றன. வங்கியியலிலும் நிதியியலிலும் சிறந்த தகைமையும் அனுபவமும் உள்ள எமது முகாமையாளர்களின் நிர்வாகத்திறன் அதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

### சிறந்த வருமானம்

ஷப்ரு கவர்ச்சிகரமான வட்டி வீதங்களுடன் பல்வேறு விசேட சலுகைகளையும் வசதிகளையும் வழங்குகின்றது. உங்கள் தேவைக்கேற்ப வட்டியை மாதாந்தம், காலாண்டில் அல்லது முதிர்ச்சியில் பணமாகவோ, காசோலையாகவோ அன்றி வங்கிக்கணக்கூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

### திறமையான சேவை

வாடிக்கையாளரின் வெற்றியும் திருப்தியுமே எமது பிரதான நோக்கமாகையால் அவர்களின் கோரிக்கைகளையும், தேவைகளையும் சிநேகபூர்வமாக உடனுக்குடன் கவனித்து திறமையான சேவைகளை வழங்குகின்றோம்.

### சுலபமான மீளப்பெறுகை

உங்கள் முதலையும் வட்டியையும் முதிர்ச்சிக்கால எல்லையில் சுலபமாக மீளப்பெறலாம். போதியளவு முன்னறிவித்தலுடன் உங்கள் முதலீட்டை குறித்தகால முதிர்ச்சிக்கு முன்னும் மீளப் பெற்றுக்கொள்ளமுடியும்.

### மேலதிக வசதிகள்

இவை வைப்புப் பொறுப்பாகவுள்ள கடன்கள், உத்தரவாதப் பத்திரங்கள், வீட்டுப் பாவனைப் பொருள்களுக்கான தவணைக் கொள்வனவு நிதி, வீடமைப்பு மற்றும் ஆதன அபிவிருத்தி நிதி வசதி, மேலும் அவைபற்றிய ஆலோசனைகள் போன்ற பலவற்றை உள்ளடக்கியுள்ளன.

### பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணரத்ன,
சட்டத்தரணி. சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B., (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்,
A. I. B, (Lond.), பொது முகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி,
B. A (Hons)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4,365,000 | 8,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,386,335 | 3,030,474 | 5,485,384 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577.492 |
| வங்கிக் கடன்கள் | 1,791.516 | 8,283.618 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206.887 | 25,811.712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8.505,201 | 16,880,879 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1.356,205 | 1.372.825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

# நம்பிக்கை நாணயத்தின் சின்னம் - ஷப்ரு

## இலங்கை மத்திய வங்கியின் விதிகளுக்கு அமைய அதிகரிக்கப்பட்ட புதிய வட்டி வீதங்கள்

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |


நிலையான வைப்பு / TERM DEPOSIT
ஆகக் குறைந்த வைப்புத்தொகை — ரூபா 1,000/-
மாதாந்த வட்டி பெறுவதற்கு
ஆகக்குறைந்த வைப்புத்தொகை — ரூபா 5,000/-

2. முதலீட்டுச் சேமிப்புத்திட்டம் INVESTMENT SAVINGS DEPOSIT

| | 1 வருடம் | 2 வருடங்கள் | 3 வருடங்கள் |
|---|---|---|---|
| ரூபா | 12% | 14% | 16% |
| 100/= | 1,280.93 | 2,783.41 | 4,643.27 |
| 200/= | 2,561.86 | 5,566.82 | 9,286.54 |
| 300/= | 3,842.79 | 8,350.23 | 13,929.81 |
| 400/= | 5,123.72 | 11,133.64 | 18,573.08 |
| 500/= | 6,404.65 | 13,917.05 | 23,216.35 |
| 600/= | 7,685.58 | 16,700.46 | 27,859.62 |
| 700/= | 8,966.51 | 19,483.87 | 32,502.89 |
| 800/= | 10,247.44 | 22,267.28 | 37,146.16 |
| 900/= | 11,528.37 | 25,050.69 | 41,789.43 |
| 1000/= | 12,809.30 | 27,834.10 | 46,432.70 |

வைப்பு சான்றிதழ் CERTIFICATE OF DEPOSIT

| காலம் | சான்றிதழின் பெறுமதி | | | | வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|
| 06 மாதம் | 4,588/- | 9,175/- | 45,872/- | 91,744/- | 18% |
| 12 " | 4,133/- | 8,265/- | 41,323/- | 82,645/- | 21% |
| 24 " | 3,379/- | 6,757/- | 33,784/- | 67,568/- | 24% |
| முதிர்ச்சியில் பெறுமதி | 5,000/- | 10,000/- | 50,000/- | 100,000/- | • |




**SHABRA UNICO FINANCE LIMITED**
61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4, TEL. 589310, 500576.
**ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.**
யாழ் முகவரி: 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 22073 - 24805

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலக நிர்வாக அதிகாரி

கிளிநொச்சி செயலக நிர்வாக அதிகாரியாக திரு. கா. சந்திரராசா கடமைப் பொறுப்பேற்றுள்ளார்.

கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளராக திரு. மார்க்கண்டு நியமனம் பெற்றுள்ளார். (இ)

## உணவு முத்திரை விநியோகம்

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலத்தின் உடன் நடவடிக்கையால் முல்லைத்தீவு மாவட்ட மக்களின் உணவு முத்திரைகளுக்கான அரிசி, மா, சீனி, பருப்பு ஆகியவை வழங்கப்பட்டுள்ளன

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சமாஜ பொதுமுகாமையாளர் உட்பட சக ஊழியர்களும் உணவு முத்திரைகளுக்கான பொருள்களை உரிய நேரத்தில் லொறிகள் மூலம் பெற்று உரிய இடங்களுக்கு அனுப்பி வைத்தனர். (இ 92)

## பாதிக்கப்பட்ட சனசமூக நிலைய விவரம்

யாழ்ப்பாணம், அக். 2

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களாலும், தாக்குதல்களாலும் சேதமடைந்த சனசமூக நிலையங்கள் அனைத்தும் இப்பாதிப்புத் தொடர்பான முழுவிபரங்களையும் தலைவர், செயலாளர், ஒப்பந்தத்துடன் திரு சி. கி. வரதராசா பொதுச் செயலாளர் யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம், இல- 131, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளன.

சேதம் தொடர்பான விவரங்களை பொதுச் செயலாளருக்கு இரு இணைப் பிரதிகளில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

## அம்பாறையிலும்

மட்டக்களப்பு அக். 2

தியாகி திலீபனின்ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்திலும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (இ-21)

## இடநெருக்கடியை நீக்க முயற்சி

மானிப்பாய், அக். 2

மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைப்பீட வளாகத்தில் நிலவிவரும் இடநெருக்கடியை நீக்கி வைப்பதற்கான முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விடநெருக்கடியை போக்குவதற்கான புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான அனுமதிகள்வழங்கப்பட்டுள்ளன

இந்த நுண்கலைப் பீடத்துக்கு வேண்டிய இசை வாத்தியக் கருவிகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (ஒ-90)


+

J. M. J.

## உங்கள் பயண அமைப்பாளர்




★ கனடா ★ ஜெர்மனி ★ இத்தாலி
★ சுவிஸ் ★ பிரான்ஸ் ★ அமெரிக்கா

மேற்படி நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். ஒவ்வொரு வாரமும் எமது குழுக்கள் இறைவன் நல்லருளுடன் மேற்படி நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றன.

நீங்கள் விரும்பும் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

**1. கிரேக்க கப்பல் வேலை வாய்ப்புகள்**

பிரபல கிரேக்க கப்பல் கம்பனியைச் சேர்ந்த பெரிய கப்பல்களில் பணிபுரியப் பின்வருவோர் உடனடியாகத் தேவை.

Captain - Chief Officer
Chief Engineer - 2 nd Engineer
Oilers - Radio Officers
A-B

அனுபவமும் தேர்ச்சியும் உடையவர்களுக்கு உடனடி வாய்ப்பு வழங்கப்படும்

**2. செல்வம்கொழிக்கும் குவைத் நாட்டில்**

ஆஸ்பத்திரி, பாடசாலை மற்றும் பொது அலுவலகங்களில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக CLEANERS ஆகப் பணியாற்றுவதற்கு விரும்புகிறீர்களா?
சம்பளம்: 35 — 40 டினார்கள் குவைத்
உணவு, உறைவிடம் இலவசம்

குவைற் றைவர்
H. V Drivers
L. V. Drivers வீட்டுச்சாரதிகள்
குவைத் கப்பல் வேலை வாய்ப்புகள்

**3. சவூதி அரேபியா**

சவூதி அரேபியாவில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் CLEANERS உடனடியாகத் தேவை

சம்பளம்: 450 SR
ஓவர்டைம், உணவு, இருப்பிடம் இலவசம்,

**4. கனடா, லண்டன், பிரான்ஸ், கிறீஸ், சைப்ரஸ், லெபனான், ஜோர்தான், சிங்கப்பூர், அபுதாபி, ஓமான்**

**வீட்டு வேலைப் பணிப்பெண்கள்**

ஓரளவு ஆங்கில அறிவுடைய பெண்களுக்கு மேற்படி நாடுகளிலும் கண்ணியமான குடும்பங்களில் வீட்டு வேலை வாய்ப்பு. விசா முதலிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும் சகல விபரங்களுக்கும் உடனே தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறேன்.

உங்கள் பயண அமைப்பாளர்:
**S.P. ANTON**
No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C 343)




தென் புலோலி துறையாமூலை
இலங்கேஸ்வரன் சனசமூகநிலைய
**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு**
முடிவுகள்

1 ஆம் பரிசு: இல. 1060
2 ஆம் பரிசு: இல. 1985
3 ஆம் பரிசு; இல. 0009

இதர 5 ஆறுதல் பரிசுகள்
0007, 0953, 0099, 0198, 0042

(7101) நிர்வாகத்தினர்


## ஓராண்டு நினைவு அஞ்சலி



**கணபதிப்பிள்ளை பரராஜசிங்கம்**
**( சர்வா )**

அன்னை மடியில்; 20. 02. 1965
ஆண்டவன் அடியில்: 14. 10. 1987

அன்பின் திருவுருவே
அணையாப் பெரு விளக்கே
பண்பின் சிகரமே
பாசத்தின் உறைவிடமே
நெஞ்சத்தில் நீங்காத எங்கள்
நேசத் திருவுருவே
ஆருத் துயரில் எமை
ஆழ்த்தி நீ எங்கு சென்ருய்?


துயரில் வாடும்:
பெற்ருேர், உடன்பிறந்தோர்,
நண்பர்கள்.

புளியம்பொக்கணை,
கண்டாவளை.

[7105]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 23 - 6 - 1959



அநியாய அழிப்பு: 15 - 10 - 1987

**சதாசிவம் சிவகுமார்**
**திதி: 3. 10. 1988**

ஓராண்டு காலம் ஒரு நொடி போல் பறந்ததடா
ஒப்பில்லா முயற்சியை உன் மண்ணுக்கு அளித்தாயடா
நாம் பாராது பரிதவிக்கும் போது நீ பாரினில் வீழ்ந்தாயடா
பலர் உன்னைப் பாராட்டி பணிந்து நின்ருர்களடா
துணிந்து நின்று உன் உயிரை துச்சென நினைத்தாயடா
துள்ளித் துள்ளி உன் கடமையை செய்தாயடா
ஓராண்டும் நீ இல்லாது எமது இல்லம் இருண்டதடா
இனி ஒளிவிட்டு சுடர் எரிய யார் தான் வருவார்களோ?
கலங்கி கலங்கி எமது உள்ளம் சறுத்ததடா
சண் களிலே நீர் கங்கையாகி மறைந்ததடா
களங்கமற்ற உன்னை இனி யார்தான் சிவா என அழைப்பார்களடா
உங்கள் ஆத்மா சாந்தி அடையத் தினமும்

கண்ணீர்ப் பூக்களால் இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

3-10-1988 திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்தில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்ருேம்.


நன்றி

உங்கள் பிரிவால் துயருறும்
ஐயா, அம்மா, சகோதர சகோதரிமார்,
மைத்துனர், பருமக்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

இருபாலை,
கோப்பாய்.

(6867)

## காணவில்லை



**தம்பிராசா சண்முகம்**

தம்பிராசா சண்முகம், வயது 15. இவர் கடந்த யூலை மாதம் 5 ஆம் திகதியில் இருந்து காணவில்லை இவரைப் பல இடங்களிலும் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. இவரை எங்கேயாவது கண்டால் கீழ் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

Mr. K. அரியரெட்ணம்
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

(7108)


## சுகாதார சேவைகள் பிராந்தியப்பணிப்பாளர் பணிமனை

யாழ்ப்பாணம்.

1988 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி காலை 10.00 மணிவரை சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் அவர்களால் கீழே குறிப்பிட்ட கட்டிட வேலைக்கு ரூபா 250,000/- மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சில் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய மறுதினம் (18.10.88) காலை 10.30 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தகாரரோ அல்லது அவரது பிரதிநிதிகளோ சமூகம் அளிக்கலாம்.

இவ்வேலை செய்ய விரும்புவோர் எவரும் அரச கரும வேலை ஒப்பந்தகாரராகவோ அல்லது உள்ளூராட்சி ஆணையாளரினுல் அல்லது கூட்டுறவு உதவியாளரினுல் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இக்கட்டிட வேலை செய்ய விரும்புவோர் 1988 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி நண்பகல் 10.30 மணிவரை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிமனையிலிருந்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். திரும்பப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 250/- வும் திரும்பப் பெறமுடியாத பணமாக ரூபா 25/- வும் செலுத்தி கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**கிராமோதய சுகாதார நிலையம்**

**யாழ்ப்பாண மாவட்டம் - 4 கட்டிடங்கள்**

(1) கோப்பாய். (2) மானிப்பாய்.
(3. தெல்லிப்பளை. (4) சாவகச்சேரி.

**கிளிநொச்சி மாவட்டம் - 4 கட்டிடங்கள்**

(1) இராமநாதபுரம்.
(2) பல்லவராயன்கட்டு.
(3) பாரதிபுரம் (ஆலடிச்சந்தி)
(4) இயக்கச்சி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டபின் கடித உறையில் அடைக்கப்பட்டு மெழுகு சீல் வைப்பதுடன் கடித உறையின் இடதுபக்க மூலையில் "சுகாதாரப் பகுதியின் கட்டிட வேலை" என்று குறிப்பிட்டு மேற்கூறிய திகதிக்கு முன் இப்பணிமனையில் கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும். அல்லது இப்பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடப்படவேண்டும்

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் அவர்களுடைய கேள்விகள் ஏற்கப்பட்டதென்ற அறிவித்தல் கிடைத்தவுடன் ஒரு வார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப்பணத்தை செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தத்திற்கும் உடன்படல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம்

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள், ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வித் தொகையின் 5% ஒப்பந்தத்தின்படி வேலையை திருப்திகரமாகச் செய்து முடிக்க பிணைப்பணமாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நியமக்கும் வங்கியில் கட்டவேண்டும். வேலை திருப்திகரமாக முடிந்த பின் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளுதல் எதையாவது நிராகரித்தல் அல்லது முற்ருக நிராகரித்தல் ஆகிய உரிமைக்கும் அனைத்து தீர்மானங்கள், இறுதி முடிவுகள் யாவும் கேள்விச்சபை தலைவரைச் சார்ந்தது.

சுகாதார சேவைகள் பிராந்திய
பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

28-09-1988. (C/339)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





**றஜிவ்தா**
முத்துத்தப பி
தோற்றம்: 13 - 11 - 1981
மறைவு: 11 - 10 - 1987

**முத்துத்தம்பி**
பொன்னம்பலம்
தோற்றம்: 19 - 05 - 1945
மறைவு: 13 - 10 - 1987

**அருணோதயன்**
முத்துத்தமபி
தோற்றம்: 13 - 05 - 1983
மறைவு: 11 - 10 - 1987

**திதி: 02 - 10 - 1988**

கைலாச பிள்ளையார் கோயிலடியில் நடந்த அனர்த்தத்தினல் இறைவனடி சேர்ந்த கொழும்பு வர்த்தகர் பொன்னம்பலம் முத்துத்தம்பி, அவரின் செல்வங்கள் றஜிவ்தா, அருணோதயன் ஆகியோரினது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

திருமதி யோகராணி முத்துத்தம்பி, பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள், சகோதரி.

2ம் வட்டாரம், புங்குடுதீவு.

முத்துகடை.
96, பங்ஷால் வீதி, கொழும்பு - 11 (6866)

## ஓராண்டு நினைவஞ்சலி



ஆண்டவன்
படைப்பு:
13 09 - 1941

ஆண்டவன்
அடியில்:
13 - 10 - 1987

அமரர்
**வேலாயுத பிள்ளை சண்முகலிங்கம்**

மேகம் கறுக்கவில்லை; மின்னலடி
எழவுமில்லை
காசும் கரையவில்லை கண்மணியே - நசரது
செல்லடியில் சிதைந்தாயோ சிரழிந்து
மறைந்தாயோ
வல்லவனே சண்முகலிங்கா!
அன்னாரின் ஆத்மா ஈசனடியில்
இன்புற்று வாழ்க!

**மனைவி, மக்கள்.**

பிறப்பிடம்:
8ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

வசிப்பிடம்:
நாகர் கோயில் றோட்,
எழுதுமட்டுவாள்.

(6883)

## 4ஆவது புதிய பிரிவு

**89 A/L**

பொருளியல்:
**திரு. உதயன்**

★ 1-10-88 3 15 பணிக்கு ஆரம்பம்.
★ கூடுதலான நேர அட்டவணை
★ மாணவர் தொகை வரையறுக்கப்படும்.
★ முழுப் பாடத்திட்டமும் போதிக்கப்படும்.

(7107)

## முதலாவது ஆண்டு நினைவு நாள்



திருமதி [illegible]
**வீரசிங்கம் வள்ளிப்பிள்ளை**

அநியாய அழிப்பு:- 13-10-1987
திதி:- 02-10-1988

எமது குலவிளக்கே, அன்புத் தெய்வமே! பொறுமையின் சிகரமே, அனைவரது துயர்களையும் துடைத்த குணநிதியே, அம்மா, உங்கள் திருமுகத்தை காண எண்ணும் போது எங்கள் இதயம் வெதும்புகிறது. உங்கள் பிரிவால் துயருறுகின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
கனகேஸ்வரி- மகேந்திரன்.
தயாதேவி- அமரசிங்கம்,
நிரு
உற்றார், உறவினர்

''தேவிவாசா''
ஆலடி,
உடுவில். (7106)

## 60-ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி மகேஸ்வரி ஆறுமுகம்
(கனகம்மா)

மண்ணுலகம்: [illegible] 21-02-1931
விண்ணுலகம்: 02-08-1988

அன்டாய், பண்பாய், பாசமாய் எம்முடன் இருந்து எம்மை விட்டுப் பிரிந்த அன்பின் தீபமே! நாட்கள் பலவானாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களை விட்டு அகலாது. உங்கள் ஆதமா சந்தியடையத் தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்!
கணவன், பிள்ளைகள், சகோதரர்கள்,
மருமக்கள், பேரன்மார், பேத்திமார்.

ஸ்ரேஷன் வீதி,
வவுனியா. (7102)


# வெல்லுங்கள்!
# 1003 அற்புத பரிசுகள்.

நெஸ்டம் வழங்கும்
**அழகான இல்லம், போட்டி**


**1வது பரிசு**
சிங்கர் இரட்டைக்கதவு
குளிர்சாதனப் பெட்டி

**2வது பரிசு**
சிங்கர் 4 அடுப்பு
காஸ் குக்கர்

**3வது பரிசு**
சிங்கர் உணவு மேசை,
அத்துடன் 6 நாற்காலிகள்

600 பரிசுகள் — ஒவ்வொன்றும் 'நெஸ்டம்' துவாய் செட் ஒன்றுடன் ஒரு 1.8 கி. கிறும் ரின் நெஸ்பிறே முழு ஆடைப் பால் மா.

400 பரிசுகள் — 1988 செப்டெம்பர் 1 ம் திகதி முதல் வாரந்தோறும் கிடைக்கப்பெறும் சரியான முதலாவது 100 பிரவேசக் கூப்பன்களுக்கு 'நெஸ்டம்' மேசைக் கைக்குட்டைகளும் கவர்ச்சிகரமான மெகி உற்பத்திகளும்.




**போட்டி விதிமுறைகள்**

1. போட்டியில் பங்குபெறுவது மிகவும் சுலபம்- நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் பிரவேசக் கூப்பனில் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களைச் சரியாக நிரப்பி அத்துடன் நெஸ்டம் பக்கெட்டுகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட ''அழகான இல்லங்கள்'' இரண்டை இணைத்து பின்வரும் முகவரிக்கு தபாலில் அனுப்பவேண்டியதே.
''அழகான இல்லம்'' போட்டி, த. பெ. இல. 1711
மே/பா. நெஸ்லே லங்கா லிமிட்டெட்
டார்லி றோட், கொழும்பு-10.
2. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும். இது தொடர்பாக எவ்வித கடிதத் தொடர்பும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. நெஸ்லே லங்கா லிமிட்டெட் நிறுவனம் மற்றும் அவர்களது விளம்பர முகவர்களான கிராண்ட் பி. ஜே. கே. அன்ட் ச நிறுவன ஊழியர்களும் அவர்கள் குடும்பத்தினரும் தவிர்ந்த எல்லா இலங்கையரும் போட்டி-யில் பங்குபெறத் தகுதியுடையவர்களாவர்.
4. பிரவேசக் கூப்பன்களுக்கான இறுதித் தினம் 1988 நவம்பர் 10ம் திகதி.




**பிரவேசக் கூப்பன்**
1. நெஸ்டம் பின்வரும் 3 பிரதான சேர்மானங்களைக் கொண்டுள்ளது: ________, ________, ________
2. நெஸ்டம்______வகை விட்டமின்களால் போஷாக்கு நிறைந்தது
3. 100 கிறும் நெஸ்டம்________இரும்புச் சத்து அடங்கியது.
பெயர் ____________________
முகவரி ____________________

உங்கள் கூப்பனை பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்: ''அழகான இல்லம்'' போட்டி த. பெ. இல. 1711, மே/பா. நெஸ்லே லங்கா லிமிட்டெட் டார்லி றோட், கொழும்பு-10. அத்துடன் நெஸ்டம் பக்கெட்டுகளிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட 2 ''அழகான இல்லங்களை''யும் இணைத்து அனுப்புங்கள்.

Licence No S 678

**Nestum**
**உங்கள் நாளை ஆரம்பிக்க ஆரோக்கியமான வழி!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dilka Air Ticketing Service

உலகின் எந்த நாட்டிற்கும் மிகக் குறைந்த கட்டணத்தில் விமான ரிக்கற் பெற்றிட யாழ்நகரில்:- Dilka Air Ticketing Service. கொழும்பு செல்லும் சிரமத்தைத் தவிர்த்து யாழ்நகரில் விமான ரிக்கற் பெற Dilka Air Ticketing Service.

தொடர்பு:-
Dilka Air Ticketing Service
202A, Dilka Studio Bld;
Bus Stand,
Jaffna.
Tele: 24174

(கண்டிப்பாக விசா உள்ளவர்களுக்கு மட்டும்.)
(6648)



இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.

## கேள்விப் பத்திர அறிவித்தல்

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையில் பின்வரும் வாகனங்களை வாடகைச் சேவையில் ஈடுபடுத்துவதற்காக விண்ணப்பப் பத்திரங்கள் வாகனச் சொந்தக்காரர் / ஒப்பந்தக்காரர் ஆகியோரிடம் இருந்து கோரப்படுகின்றன.

1. தொழிற்சாலைப் பாவிப்புக்காக மோட்டார் வண்டி ( Motor Car ) மூன்று
2. தொழிற்சாலைப் பாவிப்புக்காக 06 தொடக்கம் 09 பயணிகள் பிரயாணம் செய்யக்கூடியவான் (Van) இரண்டு
3. தொழிற்சாலைப் பாவிப்புக்காக உழவு இயந்திரம் ( Tractor ) இரண்டு


மேற்குறிப்பிட்ட கேள்விப்பத்திரங்கள் விநியோக உத்தியோகத்தர் காரியாலயத்தில் கிழமை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலை 8 30 மணி தொடக்கம் நண்பகல் 12. 00 மணிவரையும் மீளப் பெற முடியாத வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்தி கேள்விப் பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 1988. 10. 10 ஆம் திகதி மாலை 4.00 மணி வரை விநியோகிக்கப்படும்.

--தொழிற்சாலை முகாமையாளர்.
(C/304)



# புரோட்டீன் நிறைந்த புரோட்டினெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டினெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டினெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிறும்

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.



# N. C. E. ENGLISH CLASSES
For March - 1989

Commencing on 3 - 10 - 88

CONTACT :
North Ceylon Technical Institute
14, St. Peters Lane,
Hospital Road,
Jaffna.
(C/287)



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

### COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம்: 40 நாட்கள்
ஆரம்பம்: 07-10 1988 (திங்கள், புதன். வெள்ளி வகுப்புகள்)
கட்டணம்: 950 / -(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்.)

### COMPUTER PROGRAMMING IN D BASE III

பயிற்சிக் காலம்: 2 மாதம்.
ஆரம்பம்: 11-10-1988 (செவ்வாய், வியாழன் வகுப்புகள்)
கட்டணம்: 1250/- (இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்.)

O/L படித்த இருபாலாரும் சேரலாம்,

குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி IBM Compatible, Computer இல் வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்

**UNIKCO Computer Centre**
No. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உப தபால் கந்தோருக்கருகாமை)
(C 322)



## Immediate Vacancies in SAUDI ARABIA

1. Work Schedullar (Preventive Maintenance of Air Condition)
2. HVAC Split Units/Central A/C Tech. — 800SR—1000+100 F.A.
3. A/C Technicians — 700SR—800+100 F.A.
4. Boiler Technicians — 800SR—1000+100 F A.
5. Home Appliances (Electrical Equipment) Technicians— 700SR—800+100 F A
6. Electronic Technicians— 750SR—900SR
7. Cleaning Equipment Mechanics — 700—800+100 F.A.
8. Heavy Equipment Mechanic (Buldozer Exauator Crane Etc )— 900 SR+200 F A.
9. Secretary/Typist — 700SR+100 F.A.
10. Air Compressor Mechanic— 800—900+100 F.A.
11. Plumbers — 600SR+150 F.A.
12. Painter — 500SR&150 F.A.
13. Carpenter — 550&150 F.A.
14. Generator Electricians — 600&150
15. Site Supervisors — 600&150 F.A.
16. Building Electrician — 600&150 F.A.
17. Swimming Pool Attendent- 700SR+150FA
18. A /C Technician 750+150 F.A.
19. Civil Supervisor 600+150 F.A

Please Call over at Jaffna Office with Certificate and Passport at your earliest.

Interview will be held in Colombo on 1st, 2nd, 3rd and 4th of October, 1988.
**Flight will be arranged within 15 days.**

**T V TRAVELS & TOURIST**
[Front of Railway Station]
Brown Road. Kokuvil. Sri Lanka.
(C/93)


யாழ்ப்பாணப் பகுதியில்

# கொடிய ஈரல் வியாதி பரவுவது கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், அக்.2 யாழ்ப்பாணப் பகுதியில் புதிய ஈரல் வியாதி ஒன்று (Hepatitis-B) மூன்று பேருக்குக் கண்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது.

இந்த நோய் செங்கமாரியுடனோ, அல்லது மஞ்சமாரியுடனோ தொடர்புடையது அல்லவென்றும் இது ஒரு கொடூரமான வியாதி என்றும் வைத்திய அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்:

இந்த நோய் கூடியளவில் ஈரலையே தாக்கும் எனவும் புற்றுநோய் போன்று இதற்கும் மருந்து வசதி மிகக் குறைவு என்றும் இதனால் பீடிக்கப்பட்டவர்களைக் குணமாக்குவது கஷ்டம் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் வேறு பகுதிகளில் இந் நோய் ஏற்கனவே ஏற்பட்டிருந்தாலும் யாழ்ப்பாணத்தில் இம்முறையே முதன் முதலாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார். ((அ-10)

## கம்பியூட்டர் மயப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம் அக். 2 வடமாகாணத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகள் யாவும் கம்பியூட்டர் மயப்படுத்தப்படவிருக்கின்றன.

இதற்கான நடவடிக்கைகள் மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ் நகரத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகள் முதலில் கம்பியூட்டர் மயப்படுத்தப்படும். (இ-ஐ)

## லொறி கொள்ளை அதிகரிப்பு

யாழ்ப்பாணம் அக் 2 கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் லொறிகளில் இருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அடிக்கடி கொள்ளை அடிக்கப்படுகின்றன.

கடந்த வாரத்தில் மட்டும் ஐந்து லொறிகளில் இருந்து 20 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

வவுனியாக்கும் மதவாச்சிக்கும் இடைப்பட்ட புனை என்ற இடத்திலேயே கொள்ளைச் சம்பவங்கள் பெரும்பாலும் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை சில லொறிகள் பொருள்களுடன் கடத்தப்பட்டுள்ளதாகவும் லொறி உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-10)

## திருமலையில் அகதிகளின் நிலைமை

கடந்த கால வன்செயல் காரணமாக திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த அகதிகள் குடும்பங்கள் தற்போது வழங்கப்படும் அவசர உதவி நிவாரணம் எதுவும் இல்லாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)


## நினைவஞ்சலி



யோ. நடேஸ்வரன் (அன்பு)
தோற்றம்:- 15 - 02 - 1971
மறைவு:- 9 - 4 - 1988
திதி:- 2 - 10 - 1988

2 - 10 -19 88 இன்று ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் கிரியையில் கலந்து கொண்டு அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்,
பெரியப்பா, பெரியம்மா,
மற்றும் உறவினர்கள்,
கிளிநொச்சி
(7109)



## முக்கிய அறிவித்தல்

தலையாளி ஞானவைரவர் சுவாமி கோயிலில் திருத்த வேலை செய்யவோ அல்லது திருத்த வேலை செய்வதற்கென்று பணம் சேகரிக்கவோ நான் எவருக்கும் அனுமதி அளிக்கவில்லை. ஆகையால் பொதுமக்கள் இது குறித்துக் கவனமாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். கோயில் சம்பந்தப்பட்ட எந்தவிடயமேனும் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

திருமதி R. கனகரத்தினம்
(உரிமையாளரும் முகாமைத்துவ அதிகாரமுடையவரும்)
தலையாளி,
கொக்குவில்.
(6872)



## யாழ். குருநகர் சந்தையில் கூடம் அமைக்கும் வேலைக்கான கேள்வி அறிவித்தல் கால எல்லை நீடிப்பு

யாழ். குருநகர் சந்தையில் மேற்குப் புறமாகவுள்ள கடைகள் இல. 9, 10, 11, 12க்குக் கூடம் அமைத்தல் வேலைக்கு,

கேள்விப்படிவம் வழங்கும் இறுதித்தினம் 12-10-1988 நண்பகல் 12·00மணியாகவும், கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் 14-10-1988 நண்பகல்12·00 மணியாகவும். நீடிக்கப்பட்டுள்ளதென்பதை அறியத் தருகின்றேன்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 27 - 09 - 1988.
C/347



# "M" THREE TRAVEL

பெருமையுடன் வழங்கும்
உடனடி

## வேலை வாய்ப்புக்கள்

சவுதி அரேபியாவிற்கு கடவுட் சீட்டு தந்தவர்கள் சென்ற வாரம் பிரயாணம் செய்துவிட்டார்கள். இன்னும் பலர் எதிர்வரும் 5-10-88லும், 13-10-88 இலும் பிரயாணம் செய்ய இருக்கிறார்கள்.

நீங்களும் இந்த சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் கீழ்க்காணும் வெற்றிடங்கள் தற்போது எம்மிடம் உண்டு. உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்யப்படும்.

1. சவுதி அரேபியா
ஆஸ்பத்திரி கிளினேர்ஸ்:-
(Hospital Cleaners) 21 வயதிற்கு மேற்பட்டவர்கள்
ஒட்டுனர் (Welding)
மின்சாரம் (Electrical)
தண்ணீர்பைப் (Plumber)
ஏதாவது ஒன்றில் சிறிதளவு அனுபவம் தேவை
நல்ல சம்பளம் 500 (றியால்ஸ்)

2. மின்சார அனுபவத்துடன் தண்ணீர் பம்ப் மெக்கானிக் (Water pump mechanic) Open visa 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் சம்பளம் 600 , 150 றியால்
3. Harbour Cleaners: துறைமுக கிளீனேர்ஸ்
4. Air-Port Cleaners: விமானத்தள கிளீனேர்ஸ்
5. Maintenance Cleaners: பராமரிப்பு கிளீனேர்ஸ்

**நம்பிக்கை நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.**

"M" THREE TRAVEL

திரு. செல்லையா அரசரெட்னம் (Passport No. HO 106872) Church Lane Thavady, Kokuvil. உடனடியாக எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

✶ புதிதாக கடவுச்சீட்டு செய்ய விரும்புபவர்களுக்கு ஒரு கிழமையில் கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கப்படும்

✶✶ எங்களிடம் புதுக் கடவுச்சீட்டு செய்பவர்கள் எங்கள் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினால் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்

✶✶✶ பொன்ட் (Bond) செய்து கொடுக்கப்படும்
இவை எல்லாவற்றிற்கும்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

த. இந்திரநாதன்
சோதி லேன்
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

த. இந்திரநாதன்
No. 1, 2ம் ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C.345)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

**பொருள்:**

காட்டில் ஓடும் முயலை நோக்கிக் குறி தவருமல் எய்த அம்பை ஏந்துதலை விட, வெட்ட்வெளியில் நின்ற யானை மேல் எறிந்து தவறிய வேலை ஏந்துதல் சிறந்தது.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 32073
02-10-1988 உ. பெ. இல. 83


# பனையால் விழுந்தவனை...

மந்திகை ஆஸ்பத்திரியில் ஊழியர்களின் சம்பளப் பணம் திருடப்பட்டுள்ளதாகச் செய்தி வந்துள்ளது வங்கியில் எடுத்து வரப் பட்ட பணம் சில ஊழியர்களுக்குப் பகிர்ந் தளிக்கப்பட்ட பின்னர், ஏனைய ஊழியர் களின் சம்பளம் இரும்புப் பெட்டியில் வைத் துப் பூட்டப்பட்டது. அடுத்த நாட்காலை யில் வந்து பார்த்த போது அது உடைக்கப் பட்டுப் பணம் திருடப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டிருந்ததாம்.

இது அரசாங்க நிறுவனம் ஒன்றில் நடந்த திருட்டு. பணத்தைச் சூறையாடி யவர்கள் யார் என்று தெரியாது. இதே போல இப்போது தனியார் ஸ்தாபனங்களி லும், வீடுகளிலும் திருட்டுக்கள், கொள்ளை கள் மலிந்து வருகின்றன.

பட்டப் பகலிலும் துணிகரமான திருட் டுக்கள், கொள்ளைகள் நடக்கின்றன. ஊர டங்கு நேரத்திலும் கொள்ளைகள் நடக்கின் றன. ஆயுதபாணிகளாக வருபவர்களே திருட் டுக்களை நடத்துகின்றனர். அவர்கள் கொண்டு வருவது அசல் ஆயுதங்களா அல் லது போலி ஆயுதங்களா என்று ஆராய்வ தற்கு வீட்டில் இருப்பவர்களுக்கு அவகாசம் இருப்பதில்லை. உயிருடன் விளையாடும் ஆயு தங்களுடன் 'சான்ஸ்' எடுப்பதற்கு எவரால் முடியும்?

இந்தக் குறைபாட்டைத் தமக்குச் சாதக மாக்கிக் கொண்டு, உள்ளூர்த் திருடர்களும் கொள்ளையர்களாக மாறுகின்றனர். சிறு அளவில் திருட்டுக்களை நடத்தியவர்கள் தங்கள் படிகளை உயர்த்திக் கொள்கிறார்கள் இயக்கங்களில் இருந்து விலகியவர்களும் இந்தக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுவ தாகச் சொல்லப்படுகிறது.

ஆனால் கொள்ளைகளை நடத்தும் பலரும் தாங்கள் இயக்கக்காரர்கள் என்றே காட்டிக் கொள்கிறார்கள். அதனால் மக்களும் குழப்ப மடைகிறார்கள். அதன் விளைவாக இயக்கங் களுக்கு மாசு ஏற்படுகிறது; மக்கள் அவற்றை அவமதிக்கவும் ஏதுவாகிறது.

எப்படியாயினும் கொள்ளைகள், திருட் டுக்களால் பாதிக்கப்படுபவர்கள் மக்களே. கடந்த பல வருடங்களாக நடந்து வரும் அசம்பாவிதங்களால் பொருளாதார ரீதியில் பாதிப்புற்று நிவாரணம் தேவைப்படும் நிலை யில் நிற்கும் ஒரு சமூகத்தில் கொள்ளைகளும் திருட்டுக்களும் பலிவது பெரும் பாரதூர மான விளைவுகளை ஏற்படுத்தும்.

இந்தக் கொள்ளைகளைத் தடுப்பது எப்படி என்ற கேள்வி நீண்ட காலமாகவே எம் மக் கள் மத்தியில் எழுந்து நிற்கிறது. எனினும் இன்னும் சரியான விடை இல்லை அதனால் கொள்ளைகள் மக்களின் தொல்லைகளாக நிலைத்துவிட்டன.

கொள்ளைகள் சமூகத்தை முடமாக்கும் ஒரு நோயாகவும் பரவி வருகிறது. இந்தக் கட்டத்திலேனும் கொள்ளைகளைத் தடுக்க ஆக்க பூர்வமாக ஏதாவது செய்யப்பட வேண்டும். சமூகத்தின் பல தரப்பிலும் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து தடுப்புத்திட் டம் ஒன்றை வகுக்க வேண்டும். கிராம மட் டத்தில் மக்கள் ஒற்றுமையுடன் சேர்ந்து இயங்கக்கூடிய விதத்தில் கொள்ளைத்தடுப்புத் திட்டம் அமைவது அவசியம். இல்லையேல் பனை யால் விழுந்தவனை மாடேறி மிதிக்கும் நிலைக் குத் தமிழர் சமூகம் தள்ளப்படும் நிலை தொட ரும் அபாயம் உண்டு.

சலப்பை ஆறு கண்ணிவெடி:

# 3 நாட்கள் தொடர்ந்த தீவிர தேடுதல் வேட்டை

திருகோணமலை, அக்.2

குச்சவெளியில் சலப்பை ஆறு என்னும் பகுதியில் இம்மாதம் 27 ஆம் திகதி இடம் பெற்ற கண்ணிவெடியில் மூன்று இந்திய ஜவான்களின் மரணத்தை அடுத்து அந்தப்பகுதி பலத்த தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டது.

சலப்பை ஆற்றுப் பாலத்துக்கு அப்பால் வாகனங்களும், பயணிகளும் செல்வதற்கும் வருவதற்கும் தடைவிதிக்கப் பட்டு சடும் தேடுதல் வேட்டை மூன்று நாட்களாகத் தொடர்ந்தது.

காட்டுப் பகுதியில் இடைக்கிடை வெடிச்சத்தங்கள் கேட்டதாக அப் பகுதியில் இருந்து வந்த மக்கள் கூறினர். கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியால் வந்த ஒரு வாகனத்தின் சாரதியும் கிளினரும் இந்தியப் படையினரால் தாக்கப்பட்டுள்ளதாகப் புகார் கூறப்படுகிறது. (அ-150)

பாகிஸ்தான்

# ஹைதராபாத்தில் நடந்த திடீர் தாக்குதல் 50 பேர் பலி; 100 பேர் காயம்

## இனமோதல் எனத் தகவல்

இஸ்லாமாபாத், அக் 1

ஹைதராபாத் நகரில் நேற்று முன்தினம் இனந் தெரியாத நபர்கள் நடத்திய தாக்குதல் ஒன்றில சுமார் 50 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப் பட்டது.

திடீரென்று வாகனங்களில் வந்திறங்கிய ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று பெரு இடங்களில் சூழுமி நின்ற மக்கள் மீது சுண்ட மாதிரிச் சுட்டனர்.

நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

அரை மணித்தியாலம் இந்த வெறியாட்டம் நீடித்தது.

சிந்து - முஹாஜிதீன் இனத்தவர்களுக்கு இடையே நீண்ட காலமாக இருந்து வந்த மோதலின் ஒரு சட்டமே இச் சம்பவம் என்று சொல்லப்படுகின்றது

உடனடியாகத் துருப்புக்கள் அந்த இடத்துக்கு விரைந்து சென்றன.

கால வரையறையற்ற ஊரடங்கு அப்பகுதியில் உடனடியாகப் போடப் பட்டது. (எ)

வெளி உலகில்

# ராஜீவுக்கு எதிராகப் புரட்சி நடத்த அருண்நேரு திட்டம்

## அந்துலே தகவல்

பம்பாய், அக். 1

'திடீர் புரட்சிநடத்திய பிரதமர் ராஜீவ் காந்தியை கவிழ்க்க முன்னாள் மத்திய அமைச்சர் அருண்நேரு பயங்கர சதித்திட்டம் தீட்டியிருந்தார்' என மகாராஷ்டிர முன்னாள் முதல்வர் ஏ. ஆர். அந்துலே குற்றம் சாட்டியுள்ளார்.

அந்துலே முதல்வராக இருந்தபோது 'சிமிண்டு ஊழல்' செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து அந்துலே முதல்வர் பதவியை விட்டு விலகினார். பின்னர் காங்கிரஸ் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.

சமீபத்தில் அந்துலே மீண்டும் காங்கிரஸில் சேர்த்துக் கொள்ளப் பட்டார். பம்பாய் நகரில் நிருபர்களைச் சந்தித்தபோது அவர் கூறியதாவது,

தற்போதைய ஜனமோர்ச்சாத் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான அருண்நேரு பிரதமர் பதவி மீது கண் வைத்து இருந்தார். அமைச்சராக இருந்த போது இதற்காக இந்தியா முழுவதிலும் எல்லா முக்கிய பதவிகளிலும் தனக்கு வேண்டியவர்களை நியமித்தார். சரியான நேரம் வரும்போது திடீர் புரட்சி நடத்தி ராஜீவை கவிழ்க்கத் திட்டமிட்டிருந்தார்.

அருண்நேருவிடம் எச்சரிக்கையாக இருங்கள்' என ராஜீவிடம் கூறியிருந்தேன். ஆனால் அப்போது அதை ராஜீவ் தவருக புரிந்து கொண்டார். 'தனக்கும் அருண் நேருவிற்கும் இடையே (ராஜீவின் உறவினர் அருண்நேரு) பிளவை ஏற்படுத்த நான் திட்டமிடுவதாக' ராஜீவ் நினைத்தார்.

உண்மையான காங்கிரஸ் தொண்டன் நான், அருண்நேருவின் இந்த சதியை ராஜீவிடம் தெரிவிக்க வேண்டியதுஎனது கடமை. பின்னர் ராஜீவும் இந்த சதியைப் புரிந்து கொண்டார். அருண்நேருவைப் பற்றியும் தெரிந்து கொண்டார்.

ராஜீவுக்கும் எனக்கும் எப்போதும் கருத்து வேறுபடு இருந்தது கிடையாது. நான் தனிக் கட்சி துவங்கிய பின்பு கூட காங்கிரஸை ஆதரித்து வந்தேன்.

இவ்வாறு அந்துலே கூறினார். (எ-4)

# உலகச் சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சி

லண்டன், அக. 1

லண்டன். நியூயோர்க் உலக சந்தையில எண்ணெய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள பெரிய விலை வீழ்ச்சி இது என்று சொல்லப்படுகின்றது.

ஒரு பீப்பாய் எண்ணெய் 10டாலர் விலைக்கு விற்கப்படுகிறது.

எண்ணெய் உற்பத்தி நாடுகள் உற்பத்தியை மட்டுப்படுத்தாமையே காரணம் என்று கூறப் படுகிறது.

இதனிடையில் சவூதி அரேபியா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கப்போவதாக வேறு அறிவித்திருக்கிறது. (எ)

# நச்சுக் கழிவுப்பொருள் கப்பல் தகராறு நீடிப்பு

ரோம். அக் 1

நச்சு இரசாயனக் கழிவுப் பொருள்களுடன் மேற்கு ஜேர்மன் கப்பல் ஒன்று தென் இத்தாலித் துறைமுகத்தில் தரித்து நிற்பதை எதிர்த்து அப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இக்காலி நிறுவனம் ஒன்று இக்கழிவுப் பொருளை நைஜீரியாவில் கொட்டியிருந்தது. நைஜீரிய அரசின் உத்தரவைத் தொடர்ந்து அக்கழிவுப் பொருளை திரும்பவும் ஏற்றிக் கொண்டு இத்தாலியில் உள்ள மட்ரிடோனியா துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது.

கழிவுப் பொருளை அங்கு இறக்கக்கூடாது என்று உள்ளூர் அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஏற்கனவே நச்சுக் கழிவுப்பொருளுடன் ஆங்கிலகால்வாய் ஊடாகச் சென்று பிரிட்டன், ஸ்பெயின், பிரான்ஸ் நடுகள் அனுமதிவழங்க மறுத்த மேற்கு ஜேர்மன் கப்பல் இத்தாலியின் லிகோர்ணே துறைமுகத்தில் தரித்து நிற்கிறது. நச்சுக் கழிவுப் பொருளை இறக்க கப்பல் அதிகாரிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது (எ)

# சோவியத்தில் பெரிய மாற்றங்கள்

மாஸ்கோ, அக். 1

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப பீடத்தில இரண்டாவது இடத்தை வகிக்கும் இகார் லிகோவிச், விவசாய ஆணைக்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சோவியத் உளவு ஸ்தாபனமான கே.ஜி.பி. யின் தலைவராக திரு. செப்ரிகோவ் வேறு பதவிக்கு மாற்றப்பட்டார்.

சோவியத் தலைமைப் பீடத்தில் நேற்று முன்தினம் செய்யப்பட்ட மாற்றங்களில் இவையும் அடங்கும்

ஜனாதிபதியான அன்ட்ரி குரோமிகோவ் ஏற்கனவே தலைமைப் பீடத்தில் இருந்து அகற்றப்பட்டு விட்டார்.

# ஹாக்கியில் இந்தியாவுக்கு 6 ஆவது இடம்

சோல், அக் 1

சோல் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில இந்தியா ஆருவது இடத்தைப் பெற்றது.

2-1 கோல்களால் இந்தியாவை தோற்கடித்ததன் மூலம் பாகிஸ்தான் அணி 5 ஆவது இடத்தைப் பெற்றது.

தங்கப்பதக்கத்துக்கான இறுதிப் போட்டி இன்று சனி பிரிட்டனுக்கும்மேற்குஜேர்மனிக்கும் இடையே நடைபெறுகிறது. (இ-எ)

# சினிமா டைரக்டர் கைது!

மதுரை வங்கிக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக சினிமா டைரக்டர் ஒருவரும் கைது செய்யப் பட்டார்.

அவரின் பெயர் போஸ் கீதம் ஒரு சங்கீதம், கோவில் யானை ஆகிய படங்களை டைரக்டர் செய்திருக்கிறார்.

ஏற்கனவே இது சம்பந்தமாக கைது செய்யப்பட்ட மதுரை முன்னாள் மேயர் முத்துவின் மகன் நல்லசம்பியுடன் சேர்ந்து சினிமாப் படம் எடுக்க இவர் திட்டமிட்டிருந்தார் என்று கூறப் படுகிறது

மொத்தம் 14 பேர் இக்கொள்ளை சம்பந்தமாகக் காவலில தற்போது வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-எ-4)

# திருத்தல பாத யாத்திரை

யாழ்ப்பாணம், அக் 2

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பகுதிக்கு உட்படும் கிராமசேவையாளர் ஆலய முகாமையாளர் பரிபாலனசபையினர், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் ஆதரவுடன் ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா திருத்தல யாத்திரை ஒன்றை மேற்கொள்கிறார்.

இப்பாத யாத்திரை இன்றுஞாயிற்றுக்கிழமை முதல7ஆம்திகதிவெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்

இந்த ஆறு நாட்களிலும் வலி தெற்கு பிரிவிலுள்ள சல ஆலயங்களையும் தரிசிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (ச)

## கொக்குவில் ஞானபண்டித பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், அக் 2

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

முதன்மை விருந்தினராக யாழ்மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு வெற்றிவேலு சபாநாயகம் கலந்து கொள்வார்.

நல்லூர் கல்வி அதிகாரி திரு சு. சிவநாயகமூர்த்தி, கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் முன்னாள் அதிபர் திருபதி க. தருமலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

திருமதி புஸ்பவதி சபாநாயகம் பரிசில்களை வழங்குவார்

பாடசாலை அதிபர் திரு. கா. கணேசதாசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ-க)

# 'பரதக்கலை' பல்கலைக்கழகத்துக்கு பெருமை தேடித் தரும் படைப்பாகும்

## நூல் வெளியீட்டு விழாவில் துணை வேந்தர் புகழாரம்

யாழ்ப்பாணம், அக். 3

எமது கலை, கலசாரத்தை வளர்ப்பதற்கு அன்னியர் எழுதிய நூல்களைப் படித்து திருப்தி அடையமுடியாது எமது பேராசிரியர்கள் ஆய்வுகளை நடத்தி புத்தகங்களை வெளியிட வேண்டும்.

விரிவுரையாளர் வி. சிவசாமியின் 'பரதக்கலை' நூல் எமது பல்கலைக்கழகத்திற்கு பெருமை தேடித் தரும் படைப்பாகும்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமஸ்கிருத பீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் திரு வி. சிவசாமியின் ''பரதக்கலை'' நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும் பொழுது யாழ் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நூல்வெளியீட்டு விழாவை யாழ். பல்கலைக் கழக துணை வேந்தர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் ஆசியுரை வழங்கி புவியியற்றுறையைச் சேர்ந்த திரு. இரா. சிவசந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

துணை வேந்தர் துரைராஜா தனது உரையில் மேலும் கூறியதாவது:- ' திரு. சிவசாமியின் ஆய்வு நூல்கள் போன்ற நூல்கள் மேன்மேலும் வெளிவர வேண்டும்.

யாழ் பல்கலைக்கழகத்தின் பெயரைத் துலங்க வைக்க இன்னும் பலர் இதுபோன்ற முயற்சியில் ஈடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்'' எனச் சொன்னார்

யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் நூலை அறிமுகம் செய்து வைக்கையில் கூறியதாவது, 'தமிழரின் கலை, கலாசாரம் பாரம்பரியத்தை வளர்க்கவும் பாதுகாக்கவும் ஸ்தாபிக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி அமைந்த இடத்தில் இந்நூல் வெளியிடப்படுவது மிகவும் பொருத்தமானது.

நூலாசிரியர் தான் பெற்ற அறிவை மற்றவர்களுடன் பகிரும் வகையில் இந்நூலை எழுதியுள்ளது போற்றத்தக்கது' எனச் சொன்னார்.

யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் ஆய்வுரை வழங்குகையில் 'நூலாசிரியரின் சமஸ்கிருத அறிவு பரதக்கலையில் புதைந்துள்ள ஆழமான கருத்துக்களை வெளிக்கொணர்ந்து மக்கள் எளிதில புரியக்கூடிய வகையில் தனது நூலை எழுத உதவியுள்ளது.

இந்நூல் காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது' எனக் கூறினார்.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேசுகையில் பரதக்கலையைப்பற்றி தமிழ்மொழியில் எழுதப்பட்ட இரண்டாவது நூல் இதுவாகும்.

பரதக்கலை எனது ஆரம்பமானது இந்தியாவிலா, நேபாளத்திலா என்ற கருத்து தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலே பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி விட்டது

நூலாசிரியர் இச் சர்ச்சையைத் தனது நூலில் எழுப்பாதிருந்தது விவேகமானது என விமர்சித்தார்.

இராமநாதன் நுண்கலைக்கழக நடன ஆசிரியை திருமதி லீலா செல்வராஜா ஆய்வுரை வழங்கினார். (ஒ-ச)

பாம்பன் பாலத்துக்கு மறு பெயர்

# அன்னை இந்திரா காந்தி பாலம் இன்று திறந்து வைக்கப்படும்

சென்னை, அக் 2

பாம்பன் பாலத்துக்கு 'அன்னை இந்திரா காந்தி பாலம்' என்று பெயரிடப்படவுள்ளது.

இந்திய நிலப்பரப்பையும் ராமேஸ்வரம் தீவையும் சாலை மூலம் இப் பாலம் இணைக்கிறது

2. 300க்கு அதிகமான மீட்டர் நீளமான பாலம் இது கடல்மட்டத்துக்கு [illegible] மேல் வில் வடிவத்தில் [illegible]

இதனால் இப்பாலத்துக்குக் கீழ் கப்பல்கள் தாராளமாகச் செல்ல முடியும்.

இலங்கைப் பணத்தில் சுமார் 50 கோடி ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள இப்பாலத்துக்கு 1973 இல் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அத்திவாரக்கல் நட்டு வைத்தார்.

இன்று ஞாயிறு காந்தி ஜெயந்தி அன்று பிரதமர் ராஜீவ் காந்தி இப் பாலத்தை மக்கள் பாவனைக்குத் திறந்து வைப்பார் (இ-எ)

# கிளிநொச்சியில் ஆசிரியருக்கு நியமனக்கடிதம்

யாழ்ப்பாணம், அக் 2

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள், கிளிநொச்சிப் பிராந்திய கல்வி அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றன

ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவும் பின் தங்கிய கிராமப்புற பாடசாலைகளுக்கே பெரும் பாலான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். (ஒ-144)

# எட்டுத் தமிழர் கொலை; அதை அடுத்து புதிய முகாம்

கல்முனை அக் 2

பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த கல்லைக் கிராமத்தை 25 ஆம் இலக்க குடியேற்றக் கிராமத்தில் யாழ்ப்பாணத்துச் சந்திக்கு அருகாமையிலுள்ள மூன்று விவசாயத் தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த ஆண், பெண் உட்பட எட்டுப் பேர்கள் ஆயுதம் தரித்த சிங்கள ஊர்காவல் படையினரால் வெட்டியும், சுட்டும் கொல்லப் பட்டுள்ளனர்.

கடந்த ஞயிறு இரவு எட்டு மணி பளவில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றிச் சொல்லப் படுவதாவது:-

அடுத்தடுத்து உள்ள மேற்படி மூன்று தமிழ் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் இரவு உணவு அருந்த ஆயத்தமான போது அங்கு திடீரென வந்த ஆயுதபாணிகள் வீடுகளில் புகுந்து கத்தியாலும், வாளாலும் வெட்டிய போது மேற்படி குடும்பங்களைச் சேர்ந்த பலர் காடுகளுக்குள் ஓடித் தப்பிவிட்டனர்.

மூன்று குடும்பங்களிலிருந்தும் எட்டுப்பேர் கொலை செய்யப்பட்டனர். இவர்கள் எட்டுப் பேரும் தருமன்வெளி மண்டூர் ஆகிய கிராமங்களிலிருந்து குடிபெயர்ந்து சென்றவர்களாகும்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்த மண்டூர் இந்தியப்படை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் இறந்தவர்களின் சடலங்களை எடுத்து சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்துள்ளதுடன், அப்பகுதியில் தேடுதலையும் மேற்கொண்டனர் இதனைத் தொடர்ந்து அங்கு இந்தியப்படையினர் முகாமொன்றையும் அமைத்து வருகின்றனர்

சனியன்றிரவு இந்த எல்லைக் கிராமத்தில் வாழும் 11 சிங்களவர்கள் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் வெட்டிக்கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்த எட்டுப் பேரும் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது (ஒ-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சேட்டிங்ஸ் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

# உதயன்

02 - 10 - 1988 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுர ★ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை, :-: யாழ்நகர்.

புதிய உயர் கல்லூரி
A/L 89 DAY CLASSES
ஆரம்பம்: 03- 10- 88
வாரத்தில் 5 நாட்கள் நடைபெறும்.
விபரங்கட்கு:
S. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்
( C/353 )

**400 தாதிகள்...**

தென்பகுதிக்கு மாற்றப்படலாம்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பதவிக்கு புதிதாக விண்ணப்பிக்க உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை உடனடியாக பூர்த்தி செய்து தமது காரியாலயத்தில் நேரடியாக தம்மிடம் சமர்ப்பித்தால் அவற்றையும் சேர்த்துக்கொள்ளத் தாம் நடவடிக்கை எடுத்து உதவ உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஓ-9)

**சொந்த---.**

நாடு திரும்பியதை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் போட்டோஸ்டட் பிரதிகள் குறிப்பாக-இந்திய அரசினால் வழங்கப்பட்ட பதிவு அட்டையின் பிரதி முக்கியமாகும்.

அனுப்பப்படும் தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'சொந்த ஏற்பாட்டில் நாடு திரும்பிய அகதிகள் என்றவாசகம் எழுதப்படல்வேண்டும் என்றும் — அந்தக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (ஓ)

**வல்வையில்......**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தும் மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்துவதற்காக ஏற்ற ஒழுங்குகளை அவ்வப்பகுதி மாணவர் அமைப்புக்கள், போக்குவரத்துச் சங்கங்கள், மற்றும் பிரசைகள் குழுக்கள் ஆகியன மேற்கொண்டுள்ளன.

## மரண அறிவித்தல்கள்

### பாலசற்குணம் சிவபாலன்

(பாலன்)

பாலசற்குணம் சிவபாலன் (பாலன்) மேற்கு ஜேர்மனியில் 26 9.1988 இல் அகால மரணமானார். இவர் பாலசற்குணம் (சாரதி, சவூதி அரேபியா), சிவபாக்கியம் தம்பதிகளின் மூத்த புதல்வனும் குணபாலன், விஜயபாலன், விஜயகுமாரி, ஜெயக்குமாரி, சசிக்குமாரி ஆகியோரின் சகோதரரும். ஜெயப்பிரியா (சத்தியா) வின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் மேற்கு ஜேர்மனியில் 3. 10. 88 அன்று நடைபெறும் -

தகவல்:-சகோதரன் குணம்

விலாசம்:
38, காரைக்காட்டு லேன்
வண்ணார்பண்ணை (நாச்சிமார் கோவிலடி)
யாழ்ப்பாணம், (7114)

### திருமதி இரத்தினவல்லி பொன்னம்பலம்

திருமதி இரத்தினவல்லி பொன்னம்பலம் காலமாகிவிட்டார்.

இவர்பொன்னம்பலம்(பயிர்ச்செய்கைஉத்தியோகத்தர் கிளிநொச்சி) அவர்களின் அன்பு மனைவியும் திரு. ராமலிங்கம் காலஞ்சென்ற திருமதி ராமலிங்கம் ஆகியோரின் அன்பு மகளும் சண்முகநாதனின் மருமகளும் திருமதி மங்கையற்கரசி, பொன்ராம் ராஜசரியர் (கொழும்பு), திருமதி சாமுண்டீஸ்வரி (புத்தளம்) குற்றாலலிங்கம் (கனடா) இளங்குமரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2-10-88 காலை 10 மணியளவில் கிளிநொச்சியில் நடைபெறும்.

தகவல்: கருணாமூர்த்தி
கிளிநொச்சி. (7115)

### திரு. அ. ஸ்ரீஸ்கந்தராஜா

(செல்வம் - ஜேர்மனி)

அ. ஸ்ரீஸ்கந்தராஜா (செல்வம்) ஜேர்மனியில் அகால மரணமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற ஏழாலை விதானையார் சி. வேலுப்பிள்ளையின் பேரனும், காலஞ்சென்ற வே. அப்புத்துரை, திருமதி அமராவதி அப்புத்துரை (கொட்டடி) ஆகியோரின் புதல்வனும், அ. கதிர்காமநாதன் (உரிமையாளர் உமா அச்சகம்), ப. விமலநாயகி, ஜெ. மங்களேஸ்வரி, இ. மகாதேவி (இந்தியா), அ. பத்மநாதன் (ஜேர்மனி), அ. தர்மசிலன் (இந்தியா), அ. தில்லைநாதன் (ஜேர்மனி), அ. ஜெயசிலன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், ந. பற்குணராசா (சுதுமலை), க. ஜெயரத்தினம் (கோப்பாய்), பொ. இராஜகுலேந்திரன் (இந்தியா), மகாதேவி கதிர்காமநாதன் (ஆசிரியை), கனகேஸ்வரி தில்லைநாதன் (இந்தியா), றஜனி ஜெயசிலன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நல்லூர் குறுக்கு வீதியில் நடைபெறவுள்ளது. அது பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
திருமதி அ. அப்புத்துரையும்,
பிள்ளைகளும்
17, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர். (6906)

### சிவசோதி உருத்திரகுமாரன்

சங்கானை அரசடி வைரவர் கோவிலடியைச் சேர்ந்த சிவசோதி உருத்திரகுமாரன் (வலி - தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் உப அலுவலக மின்பகுதி ஊழியர்) காலமானார்.

இவர் சிவசோதி – சரஸ்வதி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், குமாரேஸ்வரியின் அன்புக் கணவரும், கோகிலா, கௌசிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரா, கார்த்திகேயினி, கமலாதேவி, அருட்குமரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சச்சிதானந்தம், மாணிக்கவாசகக் குருக்கள், சண்முகசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 2 - 10 - 88 ஞாயிறு (இன்று) காலை எட்டு மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
மு. சச்சிதானந்தம்
''பத்மனசம்''
சங்கானை. (C 6910)

### திரு. கணபதிப்பிள்ளை தங்கவடிவேலு

( இளைப்பாறிய பிரதம லிகிதர் )

திரு. கணபதிப்பிள்ளை தங்கவடிவேலு 1-10-88இல் காலமானார். இவர் திருமதி மனோகரி தங்கவடிவேலுவின் அன்புக் கணவரும், திருமதி ஜெயநாயகி நடனகுமாரன், திரு. த. சற்குணன், செல்வி நிர்மலம், திரு. உருத்திரன், காலஞ்சென்ற குகானந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும், திரு. ந. நடனகுமாரின் அன்பு மாமனும், திரு. க. முருகேசப்பிள்ளை திருமதி மகேஸ்வரி வைரவப்பிள்ளை, காலஞ்சென்ற குமாரசாமி, புவனேஸ்வரி, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக அவரின் இல்லத்திலிருந்து 03- 10- 88 திங்கட்கிழமை காலை 10 00 மணிக்கு வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
த. சற்குணம்
இல. 2, நாலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம் ( 6902 )

### திருமதி கனகசபைமுதலி பொன்னம்மா

நல்லூர் 43 ராஜவீதியைச் சேர்ந்த கனகசபைமுதலி பொன்னம்மா 30-9-88ஆந் திகதி அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கனகசபைமுதலி (தபால் திணைக்களம் C.A.S. யின் அன்பு மனைவியும் தியாகராசா ஆசிரியர் (கிளிநொச்சி), நடராசா (கணக்காளர் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், மட்டக்களப்பு), சிவராசா (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், பவானி, தேம்பாமலர், வத்சலா ஆகியோரின் மாமியும், வத்சலா, வனிதா, வாசுகி, நிஷங்கன், கிருஷ்ணமேனன், ராதாகிருஷ்ணன், ரஜி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 2-10-88 ஞாயிறு காலை 9 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் செம்மணி மயானத்தில் நடைபெறும்.

தகவல்;
தியாகராஜா குடும்பத்தினர்
(6905)

### திரு. G. A. சத்தியநாதன்

(இளைப்பாறிய இலங்கை வங்கி முகாமையாளர்)

G.A சத்தியநாதன் அவர்கள் சிவபதமெய்திவிட்டார். அன்னார் அம்பிகாரத்தினத்தின் அருமைக் கணவரும், துஷ்யந்தனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நீர்வேலியைச் சேர்ந்த மலாயன் பென்ஷனர் G.அப்புத்துரை ஞானமணி தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற மலாயன் பென்ஷனர் அ. சின்னப்பு தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புத் தமையனும், நவரத்தினராஜா, சிவஞானம் திசைவீரசிங்கம், சிவபாதசேகரம், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன், பொ. தம்பிராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இறுதிக்கிரியைகள் 2- 10- 88 ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்புத்துறையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10- 00 மணிக்குத் தகனக்கிரியைக்காகக்கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ச. துஷ்யந்தன் (மகன்)
115/2 கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (6908)

**தமிழ் அரசியல்..**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாக கூறியதனை அடுத்து இந்தியாவின் நிர்ப்பந்தத்தால இலங்கை அரசு அனைத்துக் கைதிகளையும் விடுதலை செய்வதாக உறுதி கூறியது.

ஆனால் தமிழ் பேசும் மக்களின் விடயத்தில் தட்டிக் சழிக்கும் போக்குடன் எப்பொழுதும் செயல்பட்டு வந்துள்ள இலங்கை அரசு இத்தடவையும் இவ் விடயத்தில் தமது கபட நாடகத்தை மீண்டும் ஒரு முறை நடத்திக்காட்டியுள்ளது

ஜனாதிபதிச் செயலகம் அண்மையில் விடுத்த அறிவித்தலில் அனைத்துக் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படுமென குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் விளக்கமறியலில் இருப்போரும், தண்டிக்கப்பட்டோரும் பொது மன்னிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். எனவே எமது விடுதலை இத்தடவையும்மறுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் விளக்கமறியலில் இருப்போர், தண்டிக்கப்பட்டோர் ஆகிய நாம் பொதுமன்னிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளோம்.

இன்னும் விடுதலை செய்யப்படுவதற்கு 100 க்கு குறைவானவர்களே இருப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. ஆனால்

★ பூஸா இராணுவத் தடுப்பு முகாமில் 81 தடுப்புக் காவல் கைதிகளும்.

★ பூஸா தற்காலிக சிறையில் 35 தண்டிக்கப்பட்ட கைதிகளும்.

★ கொழும்பு மகஸீன் சிறையில் 93 விளக்கமறியல் கைதிகளுமாக மொத்தம் 209 பேர் விடுவிக்கப்படாமல் உள்ளனர்.

**ஏன் இந்த நிலை ?**

அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யக்கோரி நாம் மேற்கொள்ளும் இந்த சாகும் வரை உண்ணா விரதப் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டுமென உருக்கமாக வேண்டுகின்றோம். இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# உடலுக்கு அத்தியாவசியமான நீர்த்தன்மை குறைய நேர்ந்தால்...

வயிற்றோட்டம் ஏற்படும்போது எமது உடலில் இருந்து நீரும் உப்புக்களும் வெளியேறுகின்றன. இவ்விதம் இழக்கப்படும் நீரும் உப்புக்களும் தாமதமின்றி எமது உடலுக்கு மீண்டும் வழங்கப்பட வேண்டும். இல்லாவிடின் ஏற்படும் விளைவுகளால் மரணம்கூடச் சம்பவிக்க இடமுண்டு.



உங்கள் குழந்தைக்கு வயிற்றோட்டம் ஏற்பட நேர்ந்தால் பின்வரும் இலகுவான அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள். இவை அவனை உயிராபத்தில் இருந்து காப்பாற்றும்:

1. வயிற்றோட்டம் ஏற்பட்டதும் பொரி அரிசிக் கஞ்சி, அரிசிக் கஞ்சி, உப்புக் கலந்த எலுமிச்சம் பழச் சாறு, செவ்விளநீர், சாயம் குறைந்த தேநீர் போன்ற நீராகாரங்களைப் போதிய அளவு குடிக்கக் கொடுங்கள். தாய்ப்பால் குடிக்கும் குழந்தையானால் தொடர்ந்து பால் ஊட்டுதல் முக்கியம். புட்டிப் பால் கொடுப்பதானால் வழக்கத்தைவிட இருமடங்கு நீரில் பால் மாவைக் கரைத்து ஊட்டுங்கள்.

2. இவ்விதம் செய்தும் வயிற்றோட்டம் நீடித்தால் குழந்தைக்கு உடல் உலர்ச்சி ஏற்படக்கூடும். உடல் உலர்ச்சியின் முதலாவது அறிகுறி கடும் தாகமாகும்.

3. இந்த நிலையில் உடனடியாக குழந்தைக்கு ஜீவனி பானம் தயாரித்துக் கொடுங்கள். குழந்தையின் உடல் இழந்துவிட்ட நீரையும் உப்புக்களையும் ஜீவனி மீள அளிக்கும்.

ஜீவனியை உங்கள் கூட்டுறவுக் கடையில் அல்லது அண்மையிலுள்ள மருந்துக் கடையில் வாங்கலாம்

ஒரு பக்கெட்டின் விலை: ரூ. 5/- மட்டுமே.

**வளரும் பயிரான உங்கள் குழந்தையின் உயிரைக் காப்பாற்றுங்கள்.**

JWT UF 2682


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிரைவேற்] லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 2 - 10 - 1988 இல்
Printed and Published by New Uthayan Publications (Pvt.) Ltd, 292/2, Navalar Road, Jaffna on Monday 2nd October 1988.